**FORM-3**
**MINUTES OF THE COUNCIL MEETINGS**
**(See rule 5 and Serial Number 3 of Appendix - I)**
குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2011 ஜுன் திங்கள் 30.06.2011–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது

**முன்னிலை**
திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கட்டிடங்களின் கதவு எண்கள்.16–185/1, 16–185/2 வரி விதிப்பு எண்கள்.5180, 5181 என்ற கட்டிடங்கள் இடிக்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிடங்கள் ஏதுமில்லை. மேற்படி கட்டிடத்தின் வரி விதிப்புகளை நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/1388/2011)

**தீர்மானம் எண். 1636: பொருள் எண்.1 முதல் 4 வரையிலான இனங்கள் விரிவான விளக்கத்துடன் பொருள் வைப்பதற்கு வேண்டி ஒத்தி வைக்கப்பட்டது. (அடுத்த சாதாரணக்கூட்டத்தில் பொருள் வைப்பதற்காக).**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கட்டிடத்தின் கதவு எண்.29–82A வரி விதிப்பு எண்.7347 என்ற கட்டிடம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தின் வரி விதிப்புகளை நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/1536/2011)

**தீர்மானம் எண். 1637: பொருள் எண்.1 முதல் 4 வரையிலான இனங்கள் விரிவான விளக்கத்துடன் பொருள் வைப்பதற்கு வேண்டி ஒத்தி வைக்கப்பட்டது. (அடுத்த சாதாரணக்கூட்டத்தில் பொருள் வைப்பதற்காக).**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கட்டிடத்தின் கதவு எண்.24–183/2 வரி விதிப்பு எண்.19526 புதிய கட்டிடம் கட்டுவதற்கு இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் வரி விதிப்புகளை நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1260/2011)

**தீர்மானம் எண். 1638: பொருள் எண்.1 முதல் 4 வரையிலான இனங்கள் விரிவான விளக்கத்துடன் பொருள் வைப்பதற்கு வேண்டி ஒத்தி வைக்கப்பட்டது. (அடுத்த சாதாரணக்கூட்டத்தில் பொருள் வைப்பதற்காக).**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கட்டிடங்களின் கதவு எண்கள்.17–61, 17–62, 17–63, 17–64 கட்டிடங்களின் வரி விதிப்பு எண்கள்.2950, 2951, 2952, 2953 புதிய கட்டிடம் கட்டுவதற்கு இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் வரி விதிப்புகளை நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1322/2011)

**தீர்மானம் எண். 1639: பொருள் எண்.1 முதல் 4 வரையிலான இனங்கள் விரிவான விளக்கத்துடன் பொருள் வைப்பதற்கு வேண்டி ஒத்தி வைக்கப்பட்டது. (அடுத்த சாதாரணக்கூட்டத்தில் பொருள் வைப்பதற்காக).**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சமாக ரூ.10640/—ஐ நிர்ணயம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.அ1/6536/2010)

**தீர்மானம் எண். 1640: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சியின் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கடைக்கு நகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை ரூ.1910/— கடையினை ஏலம் விடப்பட்டதில் திரு.செல்வராஜ் என்பவர் 20.10.2010—ல் ஏலத்தில் ரூ.2100/—க்கு மாத வாடகைக்கு எடுத்துள்ளார். நகர்மன்ற தீர்மானம் எண்.1487 நாள்.28.10.2010—ல் விளம்பரத்துடன் மறு ஏலம் விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மறு ஏலம் விடப்பட்டதில் மேற்படி நபர் ரூ.12550/—க்கு ஏலக் கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி கடைக்கு நகராட்சி நிர்ணயம் செய்த தொகையைவிட கூடுதலாக ரூ.12550/—க்கு எடுத்துள்ளார். நகர்மன்ற தீர்மானம் எண்.1535 நாள்.6.12.2010—ல் உயர்ந்த ஏலக்கேள்வியாக ஏற்றுக்கொண்டு உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 1.2.2011—ல் திரு.செல்வராஜ் என்பவருக்கு கடை ஒப்படைக்கப்பட்டது. இரண்டு மாத வாடகை தொகையினை செலுத்தவில்லை. மேற்படி நபரின் வைப்புத்தொகை ரூ.25000/— ஆகும். இரண்டு மாத வாடகை தொகை ரூ.25100/— ஆகும். எனவே மூன்றாவது மாதம் அதாவது ஏப்ரல் மாதம் 8—ம் தேதி இறுதி அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதன் பிறகும் வாடகை தொகை செலுத்தவில்லை. எனவே கடை வாடகை தொகை செலுத்தாததால் 20.4.2011—ல் காவல்துறை பாதுகாப்புடன் திரு.செல்வராஜ் குத்தகைதாரர் முன்னிலையில் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. திரு.செல்வராஜ் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். நீதிமன்றத்தில் வழக்கு எண்.136/2011 நடைபெற்று வருவதால் அவ்வழக்கு 30.6.2011—ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி வழக்கில் கடை சம்மந்தமாக மேல் நடவடிக்கை எடுக்ககூடாது என்று தடை ஆணை எதுவும் இல்லை என்று வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். நகராட்சி சட்டதிட்டங்களுக்குட்பட்டு மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடுவது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது. மன்றம் அனுமதிக்கலாம்.

**அ.குறிப்பு** : நகராட்சி வழக்கறிஞரின் அறிவுரைப்படி, மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடலாம். மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.அ1/5731/2009)

**தீர்மானம் எண். 1641: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

இந்நகராட்சியில் உள்ள ஜெராக்ஸ் மெஷின் பழுது அடைந்ததால் அதனை சரிசெய்ய அவசர அவசியம் கரதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | Sakthi Coppier<br>Electrical & Electronics Sales and Service,<br>17/8, Perumal South Car Street, Tirunelveli-1 | Rs.4000/- |
| 2. | Shameem Services,<br>899/4, Bell Amoress Colony,<br>Santhinagar, Palayamkottai. | Rs.4250/- |

| | | |
|---|---|---|
| 3. | Mover Systems & Consumables,<br>47G, Palayamkottai Road, Tuticorin-1 | Rs.4250/- |

மேற்படி பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள விலைப்புள்ளியான Sakthi Coppier நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அ.குறிப்பு** : 1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1642: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.TN74V3530-க்கு புதிய பேட்டரி பொருத்தும் வகைக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | KSSS Automobiles,<br>Nagercoil. | Rs.5100/- |
| 2. | Ganesh Motor Works,<br>Nagercoil. | Rs.4950/- |

மேற்படி பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள விலைப்புள்ளியான Ganesh Motor Works-ன் விலைப்புள்ளியை ஏற்று மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அ.குறிப்பு** : 1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1643: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

குளச்சல் நகராட்சியின் மக்கள் தொகை 2011 –ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 23155, பரப்பளவு 5.18 சதுர கி.மீ. ஆகும். 24 வார்டுகளை கொண்ட இந்நகரில் 5306 குடியிருப்புக்கள் உள்ளது. அரசு நிர்ணயித்த 50 துப்புரவு பணியிடங்களில் தற்பொழுது 46 துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். அதில் குடிநீர் பிரிவிற்கு 10, அலுவலக பணிக்கு 3, வருவாய் பிரிவிற்கு 4, ஓட்டுநர் பணிக்கு 2, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு 2, மற்றும் இரவு காவலர் பணிக்கு 1 என மாற்றுப்பணிக்கு 22 துப்புரவு பணியாளர்கள் போக மீதம் உள்ள 24 துப்புரவு பணியாளர்களை கொண்டு கொசுமருந்து அடிக்கும் பணி, பொது சுகாதாரபிரிவில் உள்ள நான்கு மினி டிப்பர் லாரி மூலம் குப்பைகள் அகற்றும் பணி மற்றும் 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை சேகரிக்கும் பணி, கழிவு நீர் ஓடை சுத்தம் செய்தல், தெரு சுத்தம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நான்கு பணியிடங்கள் காலியாக உள்ளது.

துப்புரவு பணியில் உள்ள 24 துப்புரவு பணியாளர்களை கொண்டு நகரில் உள்ள பொதுமக்களுக்கு பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை முழுமையாக செய்ய இயலாத சூழ்நிலை உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் பணிமாற்று ஏற்பாடு செய்யும் வரையில், நிரந்தர துப்புரவு பணியாளர் நபர் 1–க்கு மாத ஊதியம் ரூ.9733/– என்பதன் அடிப்டையில் நான்கு துப்புரவு பணியாளர்களுக்கு ரூ,9733 X 4 = ரூ.38932/– செலவினத்தில் இந்நகராட்சியில் 2, 3 மற்றும் 4 ஆகிய வார்டுளில் தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் வெளிபணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ1/11092/2010. நாள்.25.6.2010–ன் படி 2010–2011–ம் ஆண்டிற்கு வயது வந்த ஆண் மற்றும் பெண் தினக்கூலி பணியாளர் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் இந்நகராட்சியில் 2,3 மற்றும் 4 ஆகிய வார்டுகளில் துப்புரவு பணிகளை ஒப்பந்தபுள்ளி மூலமாக வெளிபணியாளர்களை கொண்டு மேற்கொள்வதற்கு தினக்கூலி அடிப்படையில் நாள்ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் 30 நாட்களுக்கு ரூ.6000/–வீதம் ஆறு தினக்கூலி பணியாளர்களுக்கு ஆகும் மாதாந்திர செலவு தொகை ரூ.36000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.எச்1/2622/2009)

**தீர்மானம் எண். 1644: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. பொருளில் கொடுக்கப்பட்டுள்ள முழுத்தொகையான ரூ.38932/–க்கும் நிர்வாக அனுமதி வழங்கிடவும் ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

அரசு ஆணை (நிலை) எண். 293. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.11.2010 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற ஆணை நாள்.20.11.2008 (வழக்கு எண்.24403/2008) ஆகியவற்றின்படி, நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இனிவரும் காலங்களில் பாதாள சாக்கடை அடைப்புக்கள் அல்லது நச்சுத் தொட்டிகள் சுத்தம் செய்வதற்கு மனிதர்களை பயன்படுத்தக் கூடாது எனவும் பணியாளர்கள் இது மாதிரி பணிகளில் ஈடுபடும் பட்சத்தில் அதற்குரிய சாதனங்களை பயன்படுத்திக் கொண்டு எச்சரிக்கையாக பணி செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னைஅவர்களது கடிதம் ந.க.எண்.30335/2010/யுஜிஎஸ்எஸ்–2. நாள். 05.01.2011–ல் மேற்கண்ட பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் , பாதுகாப்பு உபகரணங்களின் விலை விபர பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ.2,25,000/–க்கு மன்ற அனுமதி கேட்டு 25.2.2011 அன்று மன்றபொருள் வைக்கப்பட்டு தீர்மானம் எண்.1600 நாள்.28.2.2011–ல் UGDS திட்டம் இதுநாள் வரைக்கும் குளச்சல் நகரில் அமுல்படுத்தப்படவில்லை. அமுல்படுத்தப்படும் வேளையில், பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு உபகரணங்களை வாங்கலாம் என குறிப்பிட்டு பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்பொழுது திருத்திய மன்றப்பொருள் தயார் செய்து கீழ்கண்டவாறு வைக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 9.10.2007–ல் முகம் பாதுகாப்பு கவசம் 5 செட், நிட்ரியல் கையுறைகள் 31, கம்பூட்ஸ் 29, சேப்டி கேப் 28 ஆகிய உபகரணங்கள் வாங்கப்பட்டு தற்பொழுது பயன்படுத்தப்படும் நிலையில் உள்ளது. ஆதலால் மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் போக கீழ்கண்ட விபரப்படி உள்ள பாதுகாப்பு உபகரணங்களின் விலை விபரம் பின்வருமாறு உள்ளது.

**LIST OF SAFETY EQUIPMENTS**

| Sl. NO | Description of the Materials | Indicate Rate (Rs.P) |
|---|---|---|
| 1 | Safety body harness (Safety Belt) | 800.00 X 3 = 2400.00 |
| 2 | Respiratory Silicone Mask4187.00 with Chlorine Cartridges | 4,187.00 X 1 = 4,187.00 |
| 3 | Safety Goggles | 67.00 X 3 = 201.00 |
| 4 | Safety Helmet | 77.52 X 3 = 232.56 |
| 5 | Reflecting Jacket | 80.00 X 3 = 240.00 |
| 6 | Full Face Mask | 21000.00 X 1 = 21000.00 |
| | **TOTAL Rs.** | **28,000.00** |

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.31,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/839/2011)

**தீர்மானம் எண். 1645: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மினிலாறி எண்.TN74-Z2339-யை சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வருவதால் பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு கீழ்க்காணும் பழுதுகளை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.20000/— தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மினிலாறி சர்வீஸ் செய்தல்
2. வர்ணம் பூசும் பணி செய்தல்
3. இஞ்சின் ஆயில், ஆயில் பில்ட்டர்கள் மாற்றுதல்
4. கேபின் பேச் ஒர்க் செய்தல்
5. ஏர் கிளீனிங் பைப் மாற்றுதல்
6. ஹைட்ராலிக் ஆயில் டேங்க் பேட்ச் ஒர்க் செய்தல்
7. பிரேக் சிலிண்டல் கிட் மாற்றுதல்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/4008/2010)

**தீர்மானம் எண். 1646: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கிவரும் மினிலாறி எண்.TN74-Z8931-ன் இன்சூரன்ஸ் புதுப்பிப்பதற்காக ரூ.12451/—யை 18.6.2011—க்குள் செலுத்த கேட்டு The Oriental Insurance Company Ltd. அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றது. பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் அதற்கான தொகை ரூ.12451/——யை 20.6.2011 அன்று The Oriental Insurance Company Ltd.-க்கு வழங்கப்பட்டது என்ற விவரத்தை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4739/2008)

**தீர்மானம் எண். 1647: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

குளச்சல் நகராட்சியில் உள்ள மினிலாறி எண்.TN74-Z8931-க்கு டிப்பர் ஹெட்லாக்கில் ஏற்பட்டுள்ள பழுதினால் ஆயில் வெளியேறுகிறது.

மேற்கண்ட பழுதினை சரிசெய்வதற்கு ரூ.11000/— மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 16.6.2011 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | மணி மோட்டார் ஒர்க்ஸ் நாகர்கோவில் | ரூ.10850/— (மதிப்பீட்டைவிட 1.36% குறைவு |
| 2. | K.S.S.S.ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.10890/— (மதிப்பீட்டைவிட 1.00% குறைவு |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.36% குறைத்து கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கான மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண்.எச்1/4739/2008)

**தீர்மானம் எண். 1648: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடையினை 22.6.2011 அன்று ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலக்கேள்வி கேட்டுள்ளார்.

| வ எண் | ஏலத்தாரர் பெயர் | நகராட்சி நிர்ணயம் செய்த தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1. | அருள்செல்வன், பரப்பற்று மேற்கு, மண்டைக்காடு. | 1500 | 1500 | 25000/– DD No.848475 நாள்.21.6.2011 |
| 2. | மோகன்லால் பாபு, சாஸ்தாங்கரை, குளச்சல். | 1500 | 1525 | 25000/– DD No.848476 நாள்.21.6.2011 |

மேற்படி பொது ஏலக்கேள்வி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறுது.

**அ.குறிப்பு** : மேற்படி கட்டிடத்திற்கு நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக மாத வாடகையாக ரூ.1525/–க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள மோகன்லால்பாபு என்பவரின் ஏலக்கேள்வியை பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ2/2035/2002)

**தீர்மானம் எண். 1649: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

இந்கராட்சிக்கு 2011–2012–ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணனி பிரிவிற்கு தேவையான எழுது பொருட்கள் வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.500000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/936/2010)

**தீர்மானம் எண். 1650: ரூ.200000/–க்கு மட்டும் அனுமதி வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

குளச்சல் நகராட்சியில் 18–வது வார்டு எண்.23–65 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பை மனுதாரர் துண்டிப்பு செய்ய கோரி உள்ளார். எனவே, மனுதாரரின் வேண்டகோள் ஏற்று க.எண்.23–65–ல் உள்ள குடிநீர் இணைப்பை துண்டிக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1914/2011)

**தீர்மானம் எண். 1651: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

நகராட்சி நிர்வாக ஆணையர். சென்னை, அவர்களின் கடிதம் எண் **12919/11**/UPA – **3**, நாள் **16.06.2011–**ன் படி பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (SJSRY) **2011–12** ம் ஆண்டிற்கு கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பிரிவுகள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | USEP – சுய வேலை வாா்ப்புத்திட்டம் – தனி நபர்மானியம் | **1,29,825.00** |
| 2 | UWSP – மகளிர் சுய உதவிக்குழு – சுய உதவித்திட்டம் | **97,369.00** |
| 3 | UWSP - மகளிர் சுய உதவிக்குழு – சுழல் நிதி – RF | **32,456.00** |
| 4 | STEP–UP – பயிற்சி வேலை மேம்பாட்டிற்கான திறன் வளர்ச்சி | **1,94,738.00** |
| 5 | UWEP – கூலி வேலை வாய்ப்பு | **1,58,845.00** |
| 6 | UCDN - சமுதாய மேம்பாட்டுக் கூட்டமைப்பு | **64,913.00** |
| 7 | A & OE – நிர்வாக மற்றும் செலவீனங்கள் | **35,280.00** |
| 8 | I.E.C. - தகவல் மற்றும் தொடர்பு | **21,168.00** |
| | **மொத்தம்** | **7,34,595.00** |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**:1.மன்றம் பதிவு செய்யலாம்

**2.**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நெறிமுறைகளின்படி மேற்கண்ட அலகுகளுக்கான செலவீனங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1652: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

## FORM-3
## MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
### குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 ஜுன் திங்கள் 30.06.2011–ம் நாள் வியாழக்கிழமை காலை11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை**

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டைச்சார்ந்த பர்னட்டிவிளை பகுதியில் திருமதி.சக்கீனா மற்றும் பலர் என்பவர்கள் நகரபுல எண்.B1-11/24-ல் உள்ள 1.765 சென்ட் இடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி பொது சாலை போடுவதற்கு நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் தானப்பத்திரம் எண்.1357/2011–ன்படி தானப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தினை நகராட்சி சொத்தாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.tpi/3179/2011)

**தீர்மானம் எண். 1653: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பழுது Sluice Valve பழுது மற்றும் மோட்டார் பழுது ஆகியவற்றை சரிசெய்யும் பணிக்கு 2.6.2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | C.சந்திரசேகர்<br>ஒப்பந்தகாரர் | 1.74% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.178886.12/–) |
| 2. | P.தங்கமணி<br>ஒப்பந்தகாரர் | 3.61% மதிப்பீட்டைவிட கூடுதல்<br>(ரூ.188618/–) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.74% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1.மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1609 நாள்.28.2.2011ன்படி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2.மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிட 1.74% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண்.இ2/900/2011)

**தீர்மானம் எண். 1654: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான TN74-Z5304 என்ற எண் கொண்ட குடிநீர் லாரிக்கு தகுதி சான்று மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் புதுப்பிப்பதற்கு வேண்டி நகராட்சி ஓட்டுனர் திரு.C,சுந்தர்ராஜ் அவர்கள் ரூ.3110/– செலவு செய்து உள்ளார். மேற்படி தொகையினை திரு. C,சுந்தர்ராஜ் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1655: விரிவான பொருள் வைக்கவும். ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் 16 ஆழ்துளை கிணற்றிலிருந்த மோட்டார் மூலம் 11 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு தினந்தோறும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் அடிக்கடி மோட்டாரில் பழுதுகள் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படுவத தடைபடுகிறது. புதிய மோட்டார்கள் இருப்பில் இல்லாத காரணத்தால் மோட்டார்கள் பழுதடைந்தால் உடனே வேறு மாற்று மோட்டார் பொருத்தி குடிநீர் வினியோகம் தடைபடாமல் இருப்பதற்கு 10HP மோட்டார் மூன்று எண்ணம், 5HP மோட்டார் ஒன்று, 12.50HP மோட்டார் ஒன்றும் தேவைபடுகிறது. பொது மக்களுக்கு குடிநீர் தடைபடாமல் வினியோகம் செய்யும் பொருட்டு அவசர அவசியம் கருதி புதியதாக மோட்டார் மற்றும் பேனல் போர்டு வாங்குவதற்கு ரூ.250000/— மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2698/2011)

**தீர்மானம் எண். 1656: தரமான Texmo Motor வாங்குவதற்கும் அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்வதற்கும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேரூந்து நிலையத்தின் அருகில் உள்ள லீலா சவுண்ட்ஸ் கடையின் மேல் உள்ள நீர்தேக்க தொட்டியில் இருந்து நீர் கசிந்து கடைக்குள் தண்ணீர் சுவர் வழியாக மீட்டர் பெட்டியினுள் சென்று கீழே வழிந்து கொண்டிருக்கிறது. இதனால் சுவர் முழுவதும் மின்சாரம் பாய்ந்து மின் கசிவு ஏற்பட்டு ஆபத்து விளைவிக்கும் நிலையில் உள்ளது. மேலும் அண்ணா சிலை அருகில் கலையரங்கம் பக்கத்தில் உள்ள வணிக வளாகத்தில் உள்ள முதல் கடையிலும் மழை நேரங்களில் தண்ணீர் மேல் தளத்தின் வழியாக கசிவு ஏற்பட்டு கடை முழுவதும் தண்ணீராக உள்ளது எனவும் இதனால் தொழில் சரியாக செய்ய முடியவில்லை எனவும் புகார் கூறி உள்ளார். எனவே இரு கடைகளிலும் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு மேல் தளங்களை செப்பனிட மதிப்பீடு ரூ.30000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3518/2011)

**தீர்மானம் எண். 1657: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சி Xerox Machine-ல் மங்கலாக தெளிவற்று பிரிண்ட் வந்ததாலும் 70000 நகலுக்கு மேல் எடுத்துவிட்டதாலும் Machine-ல் உள்ள Drum மற்றும் Cleaning Plate-ஐ மாற்ற வேண்டும் என Xerox Machine பொறியாளர் கூறியதின்படி, அலுவலக பணியின் முக்கியத்தை கருத்தில் கொண்டு உத்தேச செலவுத் தொகை ரூ.4500/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.பி1/204/2010)

**தீர்மானம் எண். 1658: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

**(உண்மை நகல்)**

ஆணையர்
குளச்சல் நகராட்சி